# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 5** **நாள்: 05.06.2018**

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ரூ.2 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டிலான பருத்திப்பட்டு பூங்காவினை இன்று திறந்து வைத்தார்.**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் அம்ரூத் திட்டம் 2015–16ன் கீழ் ரூ.2 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு–16, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டுள்ள பருத்திப்பட்டு பூங்காவினை இன்று (05.06.2018) திறந்து வைத்தார்.

ஆவடி நகராட்சி 20.11.1970–ல் நகரியமாக தோற்றுவிக்கப்பட்டு, 1993ல் நகராட்சியாக உயர்த்தப்பட்டது. தற்போது சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 65 சதுர கி.மீ ஆகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 3,44,701 ஆகும். இந்நகரம் 9 வருவாய் கிராமங்களையும், 48 வார்டுகளில் 97,585 குடியிருப்புகள் உள்ளடக்கியதாகும்.

இந்நகரத்தில் கனரக வாகன தொழிற்சாலை, இராணுவ ஆயத்த ஆடை உற்பத்தி தொழிற்சாலை ஆகியவை அமைந்துள்ளதால், பிறப்பகுதிகளில் இருந்து பணிபுரிய வந்து செல்லும் மக்களால் இந்நகரம் துரிதமாக மக்கள் தொகை பெருக்கம் மற்றும் குடியிருப்புகளின் உட்கட்டமைப்பு வளர்ச்சி அடைந்து வருகிறது. பொதுமக்களின் வளர்ச்சிக்கேற்ப அடிப்படை வசதிகளை மேம்படுத்த அவசியமாகிறது.

மத்திய அரசின் நேரடி அங்கீகாரத்தின் கீழ் நகரங்களின் உள்கட்டமைப்பு பொலிவு பெற உருவான **அம்ரூத் திட்டமானது** மாநிலங்களில் முக்கிய

பெருநகரங்களை வளர்ச்சி அடைய செய்தலும், அதற்கு அருகாமையுள்ள பகுதிகளை நகரமயமாக்குதலும், பொதுமக்களின் வாழ்வாதாரத்தினை நவீன வளர்ச்சி அடைய செய்தலுமாகும். இத்திட்டத்தின் நோக்கம் கீழ்வருமாறு.

அம்ருத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீடுகளிலும் ஆய்வு செய்து குடிநீர் குழாய் இணைப்பு வழங்கவும், கழிவுநீர் இணைப்பு வழங்குதல் நகரத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திறந்தவெளி இடத்தில் பசுமைப் பூங்காக்களை அமைத்தல், வாகன போக்குவரத்தினால் ஏற்படும் மாசுக்களை கட்டுப்படுத்துதல், சாலையோரம் நடைபாதை அமைத்தல் மற்றும் இரு சக்கர மிதிவண்டி பயன்படுத்த ஏதுவாக தனி பாதை அமைத்தல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய நோக்கங்களின் அடிப்படையில் இத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஆவடி நகராட்சியில் அம்ருத் திட்டத்தின் கீழ் திறந்தவெளி இடங்களை பசுமையாக மாற்றி பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் பூங்காக்களை மேம்படுத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆவடி பெருநகராட்சியில், அம்ருத் திட்டம் 2015–16ன் கீழ் ரூ.206.00 இலட்சம் பருத்திப்பட்டு பூங்கா அபிவிருத்தி பணிக்காக ஒதுக்கப்பட்டது. இதில் ரூ.103.00 இலட்சம் (50%) மத்திய அரசின் மானியமும், ரூ.41.20 இலட்சம் (20%) தமிழ்நாடு மாநில அரசின் மானியமும் ஒதுக்கப்பெற்று, நகராட்சியின் பங்களிப்பாக ரூ.61.80 இலட்சத்திலும் (30%) திட்டம் வடிவமைக்கப்பட்டு பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

வார்டு எண்–16, பருத்திப்பட்டு பகுதியில் பூந்தமல்லி நெடுஞ்சாலையை ஒட்டி ரூ.206.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்க 08.06.2016 நாளில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, நகரமன்ற தீர்மானம் 1341/13.07.2016 நாளின் படி ஒப்புதல் வழங்கி 24.10.2016 நாளில் பணி உத்தரவு வழங்கப்பெற்று தற்பொழுது பணி முடிவுற்று, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள்

செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இப்பூங்கா சுமார் 80,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. பூங்காவில் நடைபாதை 647 மீட்டர் நீளத்திற்கும், குழந்தைகளுக்கான நவீன விளையாட்டு Jungle Gym–3 எண்கள், சறுக்கு மரம்–6 எண்கள், Single see saw-6 எண்கள், Double see saw-4 எண்கள், Double swing–6 எண்கள் போன்ற உபகரணங்களும், 2,900 சதுர மீட்டர் எழில்மிகு பசுமை தோட்டங்கள், 2 எண்கள் நீரூற்றுகள், 40 எண்ணிக்கை இளைப்பாறும் இருக்கைகள், 59 எண்ணிக்கை வண்ண விளக்குகள், நவீன கழிப்பிடம் போன்றவை அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பூங்கா சுமார் 500 நபர்கள் நடைபயிற்சி மற்றும் குழந்தைகள் விளையாடி மகிழ்தல் போன்ற சிறப்பம்சங்கள் கொண்டதாகும்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இப்பூங்காவானது இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பூங்காக்களில் அதிகளவு உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமையப்பெற்ற மிகப்பெரிய பூங்காவாகும். இப்பூங்காவினால் சுமார் 10,000 மேற்பட்ட பொதுமக்கள் பயனடைவார்கள்.

மேலும், **ஆம்ரூத் திட்டம் 2016–17**ல் கீழ் ரூ.413.00 இலட்சம் மதிப்பீட்டில் 1) ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–11ல் செந்தில் நகர் பகுதியில் பூங்கா, 2) ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–13ல் அந்தோணி நகர் பகுதியில் பூங்கா, 3) ரூ.63.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–18ல் ஆவடி வீட்டு வசதி வாரியம் பகுதியில் பூங்கா, 4) ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–27ல் லாசர் நகர் 2வது (ம) 5வது தெருவில் பூங்கா, 5) ரூ.59.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–36ல் பாலாஜி நகர் பகுதியில் பூங்கா, 6) ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–16ல் ஸ்ரீராம் நகர் பகுதியில் பூங்கா, 7) ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–35ல் கவரபாளையம் பகுதியில் பூங்கா ஆகிய **7 பூங்காக்கள்** அபிவிருத்தி பணிக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ206.50 இலட்சம் (50%) மத்திய அரசின் மானியமும், ரூ82.60 இலட்சம் (20%) தமிழ் நாடு மாநில அரசின் மானியமும்

ஒதுக்கப்பெற்று, நகராட்சியின் பங்களிப்பாக ரூ.123.90 இலட்சத்திலும் (30%) திட்டம் வடிவமைக்கப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

தொடர்ந்து, **ஆம்ரூத் திட்டம் 2017–20**ன் கீழ் ரூ406.867 இலட்சம் மதிப்பீட்டில் 1) ரூ.146.736 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–16ல் அசோக் நிரஞ்சன் நகர் பகுதியில் பூங்கா, 2) ரூ.34.671 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 16ல் இந்திரா நகர் (சாந்தி கார்டன்) பகுதியில் பூங்கா, 3) ரூ.93.730 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–6ல் செயின்ட் பிரான்சிஸ் நகர் பகுதியில் பூங்கா மற்றும் 4) ரூ.131.730 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–7ல் வெங்கடாசலம் நகர் பகுதியில் பூங்கா ஆகிய 4 பூங்காக்கள் அபிவிருத்தி பணிக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ203.433 இலட்சம் (50%) மத்திய அரசின் மானியமும், ரூ81.373 இலட்சம் (20%) தமிழ் நாடு மாநில அரசின் மானியமும் ஒதுக்கப்பெற்று, நகராட்சியின் பங்களிப்பாக ரூ.122.060 இலட்சத்திலும் (30%) திட்டம் வடிவமைக்கப்பட்டு பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்ச்சியில், ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப்பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு.கே.பாண்டியராஜன் அவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி ஏ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள், ஆவடி நகராட்சி ஆணையாளர் திரு.சி.எம்.மதிவாணன் அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு.எஸ்.அப்துல்ரஹீம் அவர்கள், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்ஸாண்டர் அவர்கள், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : ஆணையாளர், ஆவடி நகராட்சி**